## பொதுத்தமிழ் - தமிழ் அறிஞர்களும் தமிழ்த் தொண்டும் நூலகம் பற்றிய செய்திகள்

### நூலகம்(TNPSC Noolagam)

**கற்றது கையளவு, கல்லாதது உலகளவு**' என்பது **முதுமொழி**.

நம் அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குப் பெரிதும் பயன்படுவது நூலகம்.

ஒரு மனிதன் ஆண்டுக்கு 2000பக்கங்களாவது படித்தால் தான் அன்றாட உலக நடப்புகளைத் அறிந்த மனிதனாகக் கருதப்படுவான் என **யுனெஸ்கோ** கூறியுள்ளது.

**கிரீஸ்** நகர அரசுகளே முதன் முதலாக மக்களுக்கான நூல் நிலையங்களை அமைத்தன.

இந்தியாவில் உள்ள நூலகங்களில் **கல்கத்தா** தேசிய நூலகம் முதன்மையானது.

ஆங்கிலத்தில் "**லைப்ரரி**" என்னும் சொல் நூலகத்தை குறிக்கின்றது.

இலத்தின் மொழியில் "**லிப்ரா**" என்னும் சொல்லிற்குப் புத்தகம் என்பது பெயர்.

இந்தியாவிலேயே முதன் முறையாகத் தமிழக அரசுத் தான் 1948ஆம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டத்தை இயற்றியது.

தமிழக அரசின் பள்ளிக்கல்வித்துறை "**புத்தகப்பூங்கொத்து**" என்னும் வகுப்பறை நூலகத் திட்ட்டத்தை தொடங்கியுள்ளது.

இந்திய நூலகத் தந்தை : சீர்காழி சீ.இரா.அரங்கநாதன்.

நூலக விதிகளை உருவாக்கியவர் முனைவர் **இரா. அரங்கநாதன் ஆவார்.**

சிறந்த நூலகர்களுக்கு **டாக்டர் ச. இரா. அரங்கநாதன் விருது** வழங்கப்படுகிறது.

**தேசிய நூலக தினம் (National Library Day) - ஆகஸ்டு 9.**
இந்திய நூலக அறிவியலின் தந்தை என போற்றப்படும் எஸ்.ஆர். ரங்கநாதன் அவர்களின் பிறந்த தினத்தில் அனுசரிக்கப்படுகிறது.





**TNPSC Group4 2022**

*Answers given at the end of the page. or click on check answer link*

1. தேசிய நூலக நாளைத் தேர்வு செய்க.

a. ஆகஸ்டு ஒன்பதாம் நாள்

b. ஆகஸ்டு பத்தொன்பதாம் நாள்

c. ஆகஸ்டு ஒன்றாம் நாள்

d. டிசம்பர் பதினைந்தாம் நாள்

e. விடை தெரியவில்லை

Check Answer

**TNPSC Group4 2016**

2. "இந்திய நூலகத் தந்தை" எனப் போற்றப்படுபவர்

a. சி. இராமநாதன்

b. சி.இரா. அரங்கநாதன்

c. ப. கமலநாதன்

d. ம. இளந்திரையன்

e. விடை தெரியவில்லை

Check Answer

## நூலகத்தின் வேறு பெயர்கள்

* புத்தகச்சாலை
* ஏடகம்
* சுவடியகம்
* சுவடிச்சாலை
* வாசகசாலை
* படிப்பகம்
* நூல்நிலையம்
* பண்டாரம்

## நூலகத்தின் வகைகள் :

* மாவட்ட நூலகம்
* கிளை நூலகம்
* ஊர்ப்புற நூலகம்
* பகுதி நேர நூலகம்
* தனியாள் நூலகம்

## அண்ணா நூற்றாண்டு நூலகம் (Anna Centenary Library):

* அண்ணா நூற்றாண்டு நூலகம் தமிழ்நாட்டில் உள்ளது.
* இது ஆசியக்கண்டத்திலேயே இரண்டாவது பெரிய நூலகம்.
* இது எட்டு அடுக்குகளைக் கொண்டது.
* இதன் பரப்பளவு மட்டும் எட்டு ஏக்கர்.
* இந்நூலகத்தின் சிறப்பம்சம். யுனெஸ்கோவின் உலக இணைய மின் நூலகத்துடன் (World Digital Library) இணைக்கப்பட்டுள்ளது.





## தரைத்தளம்

* தரைத்தளத்தில் பார்வைத்திறன் குறைபாடு உடையோருக்கான பிரிவு உள்ளது.
* அவர்கள் தொட்டுப் பார்த்துப் படிப்பதற்கான பிரெய்லி நூல்கள் உள்ளன.
* கேட்டு அறிய ஒலி வடிவ நூல்கள், குறுந்தகடுகள் வடிவில் உள்ளன.
* இங்கு பிரெய்லி எழுத்தில் நூல்களை உருவாக்கும் கருவியும் உள்ளது.

## முதல் தளம்

* முதல் தளம் குழந்தைகளுக்காகச் சிறப்பாக உருவாக்கப்பட்ட பகுதி.
* குழந்தைகள் மகிழ்ச்சியான சூழலில் படிப்பதற்காகச் செயற்கை மரம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.
* இங்கு இருபது ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல்லூடகக் குறுந்தகடுகள் குழந்தைகளுக்காகச் சேகரித்து வைக்கப்பட்டு உள்ளன.
* பிற நாடுகளில் இருந்து திரட்டப்ப ட்ட ஐம்பது ஆயிரத்திற்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு உள்ளன.



## பிற தளங்கள்

இரண்டாம் தளம் – தமிழ் நூல்கள்
மூன்றாம் தளம் – கணினி அறிவியல், தத்துவம், அரசியல் நூல்கள்
நான்காம் தளம் – பொருளியல், சட்டம், வணிகவியல், கல்வி
ஐந்தாம் தளம் – கணிதம், அறிவியல், மருத்துவம்
ஆறாம் தளம் – பொறியியல், வேளாண்மை, திரைப்படக்கலை

ஏழாம் தளம் –வரலாறு, சுற்றுலா, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

எட்டாம் தளம் –கல்வித் தொலைக்காட்சி, நூலகத்தின் அலுவலகப் பிரிவு

**TNTET 2023**

3. 'கல்வி' தொடர்பான நூல்கள், அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் எத்தளத்தில் உள்ளன?

a. மூன்று

b. நான்கு

c. ஐந்து

d. ஆறு

e. விடை தெரியவில்லை

Check Answer

**TNTET 2022**

4. அண்ணா நூற்றாண்டு நூலகம்

(a) இரண்டாம் தளம் - (i) நூலக அலுவலகப் பிரிவு

(b) ஆறாம் தளம் - (ii) வரலாறு, சுற்றுலா

(C) ஏழாம் தளம் - (iii) தமிழ் நூல்கள்

(D) எட்டாம் தளம் - (iv) பொறியியல், வேளாண்மை

a. (a)-(i), (b)-(i), (c)(ii), (d)-(iv)

b. (a)-(i), (b)-(i), (c)-(iv), (d)-(iii)

c. (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i)

d. (a)-(iii), (b)-(ii), (c) -(iv), (d)-(i)

e. விடை தெரியவில்லை

Check Answer

## தமிழகத்தின் மிகப் பழைமையான நூலகங்கள்:

* சரசுவதி மகால் நூலகம், தஞ்சை. (1820)

* அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், சென்னை.

* கன்னிமாரா நூலகம், சென்னன. (1869),

* சென்னைப் பல்கலைக்கழக நூலகம் (1907),

* அண்ணாமலை பல்கலைக்கழக நூலகம், சிதம்பரம் (1929),

* டாக்டர் உ.வே.சா. நூலகம், சென்னை (1947),

* மறைமலை அடிகளார் நூலகம், சென்னை (1958),

* மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம் (1966),

* உலகத் தமிழ் ஆராய்;ச்சி நிறுவன நூலகம், சென்னை (1970),

* தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகம் (1981)

Answers

| | |
|---|---|
| 1. | ஆகஸ்டு ஒன்பதாம் நாள் |
| 2. | சி.இரா. அரங்கநாதன் |
| 3. | நான்கு |
| 4. | (a)-(iii), (b)-(iv), (c)-(ii), (d)-(i) |